

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து 26.2.2026 அன்று இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் ஈரோடு மாவட்டம் திண்டல் வேலாயுத சுவாமி திருக்கோவிலில் ரூ.93 லட்சம் மதிப்பீட்டில் திரு சுற்றின் உட்பகுதியில் மங்களூர் ஓடு கொண்டு நிழல் கூரை அமைக்கும் கட்டுமானப் பணியினை காணொளி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியை தொடர்ந்து வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி நிழற்குடை அமைக்கப்பட்டுள்ள இடத்தில் பணிகளை துவங்கி வைத்தார். நிகழ்வில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், துணை மேயர் வி.செல்வராஜ் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி வட்டம் வெள்ளக்கோவில் கிராமத்தில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் கடற்கரையோர அடிப்படை வசதிகள் அமைக்கும் பணிகளுக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சுதா மாவட்ட வருவாய் அலுவலர் ஆர். பூங்கொடி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## எடப்பாடி இரண்டு விரலைக் காட்டுவது – அவர்மீதும் அவரது சம்பந்தி மீதும் ஈ.டி. ரெய்டுகள்!

# கழக ஆட்சியில் - மணப்பாறை சிப்காட்டில் சுமார் 1100 ஏக்கர் பரப்பில் புதிய தொழில் பூங்கா!

## மணப்பாறை – ‘தமிழ்நாடு தலைகுனியாது’ பரப்புரைக் கூட்டத்தில் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேச்சு!

திருச்சி, மார்ச் 4 –

திருச்சி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மணப்பாறை தொகுதியில் மணப்பாறை பேருந்து நிலையம் அருகில் தமிழ்நாடு தலைகுனியாது பரப்பரை பொதுக்கூட்டம் நடைபெற்றது. நகர கழகச் செயலாளர் மு.ம. செல்வம் வரவேற்புரையாற்றினார்.

திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் , அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமை வகித்து சிறப்புரையாற்றினார்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மனோஜ் பாண்டியன், தலைமைக் கழக பேச்சாளர் நாக நந்தினி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

பி. கிருஷ்ணகோபால் சுற்றுச்சூழல் மாவட்ட அணி அமைப்பாளர் நன்றி கூறினார்.

இப்பொதுக் கூட்டத்தில் கவிஞர் சல்மா எம்.பி., தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சபியுல்லா, சேகரன், வண்ணை அரங்கநாதன், தொகுதி பார்வையாளர் அண்ணாமலை, மாநில அணி அமைப்பாளர் செந்தில், மற்றும்

மாவட்ட, நகர, ஒன்றிய, வட்ட, கிளை, கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைத்து உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் கழக தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

திருச்சி மணப்பாறை பரப்புரை கூட்டத்தில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது:

கலைஞர் சொன்னார். அவருடைய கண் அறுவை சிகிச்சைக்குப் பிறகு, அவருக்கு அந்த ஒரு கண்ணில் ஏற்பட்ட அந்தப் பிரச்சினையின் காரணமாக, அறுவை சிகிச்சைக்குப் பிறகு அவர்களிடம் கேட்டார்களாம், ‘ஐயா, உங்களுடைய ஒரு கண் இப்படி ஆனதே’ என்று சொன்னபொழுது, முத்தமிழறிஞர் கலைஞர் சொன்னாராம், ‘ஒரு கண் போனால் என்ன, என்னுடன் நல்லக்கண்ணு இருக்கிறார்’ என்று பொதுவுடைமை இயக்கத்தைச் சார்ந்திருக்கின்ற தலைவர்களைப் பற்றி அவர் சொன்னது நமக்கு நினைவுக்கு வருகின்றது.

நம்முடைய ஐயா நல்லக்கண்ணு அவர்களை நாம் இன்றைக்கு இழந்திருக்கிறோம் என்று சொல்லும்போது, அவருக்கு இந்த திராவிட முன்னேற்றக் கழக மேடை அவருக்கான அந்தப் புகழஞ்சலியைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றது, நம் அனைவரின் சார்பாக. இந்த நாட்டிற்காக உழைத்தவர், இந்த மண்ணிற்காக உழைத்தவர், ஏன் ஒட்டுமொத்த இந்தியாவிற்காகவும் இன்றைக்குக் குரல் கொடுத்த ஐயா அவர்கள் மறைந்திருக்கிறார் என்று சொல்லும்போது, அவர் வகுத்துத் தந்த பாதையில் தொடர்ந்து நாம் பயணிப்போம் என்கின்ற அந்த உறுதிமொழியை ஏற்கக்கூடிய பொதுக்கூட்டமாகவும் இது அமைந்திட வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம்.

தமிழ்நாடு தலைகுனியாது என்பதற்கு உதாரணமாக ஒரு போராட்டத்தை இங்கே எடுத்துப் பேசலாம். சிட்டிசன்ஷிப் அமெண்ட்மென்ட்




ஆக்ட் (Citizenship Amendment Act) என்று சொல்லக்கூடிய சி.ஏ.ஏ (CAA) என்று சொல்லக்கூடிய குடியுரிமை திருத்தச் சட்டம். அப்பொழுது நாம் எதிர்க்கட்சியாக இருந்தோம். அப்படி எதிர்க்கட்சியாக இருந்தபொழுது அதற்காகக் குரல் கொடுத்த ஒரே தலைவர், இந்த ஒட்டு மொத்த இந்தியாவிலேயே யார் என்று சொன்னால், இன்றைக்குத் தமிழ்நாட்டை ஆண்டு கொண்டிருக்கின்ற முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இதை நான் ஞாபகப்படுத்துவதற்குக் காரணம், அந்த குடியுரிமை திருத்தச் சட்டம் என்று வரும்போது, அண்டை நாடுகளிலிருந்து இங்கே வருகை தந்த அது இந்துக்களாக இருந்தாலும் சரி, பார்சியர்களாக இருந்தாலும் சரி, அல்லது அது கிறிஸ்தவ சமுதாயமாக இருந்தாலும் சரி, இது போன்ற சமுதாய மக்கள் அது பௌத்தமாக இருந்தாலும், ஜைன மதமாக இருந்தாலும் சரி, இவர்கள் எல்லாம் அண்டை நாட்டிலிருந்து இங்கே வருகை தருகிறார்கள் என்று சொன்னால், அப்ப அந்த அரசாங்கம் என்ன... ஒன்றிய அரசாங்கம் என்ன சொன்னது? ‘ஆறு வருஷம் இருந்தா போதும்பா, அவங்களுக்குக் குடியுரிமையை நம்ம கொடுத்துவிடலாம்’ என்று சொன்னது.

### சிறுபான்மையினரை விரட்ட ஒன்றிய அரசு முடிவு!

பார்ப்பதற்கு நன்றாக இருக்கும், நல்லது தானே? அந்த நாட்டில அவங்க சரியா வாழல, சரி இங்கே வராங்க, நாம அவங்களை அரவணைத்துக் கொள்கிறோம் என்றுதான் நமக்குத் தெரியும். ஆனால் அந்த லிஸ்டுல (List) அவங்க யாரைத் திட்டம் போட்டு நீக்குகிறார்கள் என்று சொன்னால், விடுபடுகிற அளவுக்கு அந்த லிஸ்ட்டை அவங்க போடுறாங்கன்னு பார்த்தீங்கன்னா, அதுல இஸ்லாமிய சமுதாய மக்கள் இருக்கமாட்டார்கள். அண்டை நாட்டிலிருந்து இங்கே வந்து தங்களுடைய வாழ்வாதாரத்திற்காகத் தன்னை இங்கே வாழ்வதற்காக வந்தாங்க பார்த்தீங்களா, இஸ்லாமிய சமுதாய மக்கள் அந்த லிஸ்டுல இருக்கமாட்டார்கள்.

நம்முடைய தொப்புள்கொடி உறவாக இருக்கக்கூடிய ஈழத்திலிருந்து வரக்கூடிய நம்முடைய தமிழர்கள் இருக்காங்க பார்த்தீங்களா, அவங்க அந்த லிஸ்டுல வரமாட்டாங்க. ஆனால் இந்த இரண்டு பேருக்கும் குடியுரிமை...

இரட்டைக் குரல் சொன்னது யாருன்னு சொன்னால், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞருடைய தவப்புதல்வர் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள். ஆனால் அந்தச் சட்டம் என்று எப்போ அந்தச் சட்டத்தை அவங்க நிறைவேத்துறாங்கன்னா, ஒட்டுமொத்தமாக இந்த உலகம் முழுவதும் கொரோனா பிடியில் இருந்த அந்தப் பொழுது. கொரோனாவை விரட்ட வேண்டும் என்று நாம் முயற்சி செஞ்சா, சிறுபான்மை மக்களை விரட்ட வேண்டும் என்று முடிவு செய்கிறது ஒன்றிய அரசு.

அன்னைக்கு அதுக்கு ஆதரவாக இருந்தது எது தெரியுமா? அன்றைக்கு இருந்த அதிமுக ஆட்சி அதுக்கு ஆதரவாக இருந்தது. ஆக அதை நாம் முறியடிக்க வேண்டும் என்பதற்காகத்தான் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் கிட்டத்தட்ட தமிழ்நாடு முழுவதும் கையெழுத்து இயக்கத்தை, ஏறத்தாழ 2 கோடி மக்கள்ட்ட நம்ம கையெழுத்து இயக்கத்தைப் பெற்று, கையெழுத்தைப் பெற்று அதை குடியரசுத் தலைவரிடம் போய் நம்ம ஒப்படைச்சோம்.

ஆனா நாடாளுமன்றத்தில் நீங்க என்ன பண்ணீங்க நீங்க? நாடாளுமன்றத்தில் அதற்கு ஆதரவாக இன்னைக்கு கொடுத்தது அன்றைய இருந்த அதிமுக அரசு. ஆக அதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆக இப்படி தொடர்ந்து நம்முடைய மக்களுக்காக, சிறுபான்மை மக்களுக்காக குரல் கொடுத்த ஒரு இயக்கமாக நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் இருந்தது என்பதை நீங்கள் என்றைக்குமே நீங்கள் மறந்துவிடக்கூடாது.

### ரூ.1000 த்தை நிறுத்தினால் நான் ரூ.5000 தருவேன்!

இங்கே நாகநந்தினி அவர்கள் பேசும்பொழுது சொன்னாங்க பாத்தீங்களா, இந்த 1,000 ரூபாய் பத்தி சொன்னாங்க. கிட்டத்தட்ட அவர் பேசுவது அந்த உண்மை என்ன என்று சொன்னால், அஸ்வின்குமார் உபாத்யாயா என்று சொல்லக்கூடிய பாரதிய ஜனதாவைச் சார்ந்திருக்கின்ற ஒருவர் என்ன சொல்றாருன்னா, இந்த 1,000 ரூபாய் கொடுக்கிற ஆயிரம் ரூபாயை எப்படியாச்சும் நிறுத்தணும். அது நிறுத்துறதுக்கு நாம எப்படியாச்சும் நீதிம ன்றத் துக்குப் போகணும் என்று சொன்னதை உணர்ந்த தமிழ்நாட்டோட முதலமைச்சர், ‘நீ 1,000 ரூபாய் நிறுத்துனா எங்களுடைய தாய்மார்களுக்கு நான் 5,000 ரூபாய் தருவேன்’ என்று சொன்னார் பாத்தீங்களா, அதுதான் நம்முடைய தமிழ்நாட்டோட முதலமைச்சர் அவர்கள்.

இன்னைக்கு அவங்க சொல்லும்போது சொன்னாங்க இல்லையா, ரெண்டு விரலைக் காமிச்சு அதிமுக இன்னைக்கு வந்து ஓட்டுக் கேக்குது. ரெண்டு விரல் வேற ஒன்னும் இல்ல, அவங்க கட்சிக்காரங்களே சொல்றாங்க, ஒண்ணு அண்ணன் எடப்பாடி அவர்கள் மீது வந்த ஈடி (ED) ரைடு, இன்னொன்னு அவங்க சம்மந்தி மேல வந்த ஈடி (ED) ரைடு. அந்த ரெண்டு விரலைக் காமிச்சாலே அவங்க அதான் சொல்றாங்க.

ஆனா நாம் ஐந்து விரலை நாம் உயர்த்திக் காட்டும்பொழுது:

அண்ணாவழியில் அயராது உழைப்போம்!

ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்தே தீருவோம்!

இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்!

வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்!

மாநிலச் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி!

என்று அந்த அஞ்சு விரலுக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் தந்த ஐம்பெரும் முழக்கத்தை நம்மை சொல்ல வைக்கிறது.

### மணப்பாறை தொகுதிக்கான திட்டங்கள்:

அரசு கலைக்கல்லூரி: 2021ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தின் போது துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கொடுத்த வாக்குறுதியின்படி, மணப்பாறையில் அரசு கலைக்கல்லூரி கொண்டு வரப்பட்டுள்ளது.

சிப்காட் (SIPCOT): மணப்பாறை சிப்காட்டில் சுமார் 1100 ஏக்கர் பரப்பளவில் புதிய தொழில் பூங்கா உருவாக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு அரங்கம்: 2022 ஆம் ஆண்டு கோரிக்கையை ஏற்று, தற்போது மணப்பாறையில் புதிய விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கான பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

2. **பொன்னணியாறு அணை விவகாரம்:**

அமைச்சர் அன்பில் மகேஷின் தாத்தா (அன்பில் தர்மலிங்கம்) காலத்தில், 1972ல் முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களால் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3 ஆண்டுகளில் இந்த அணை கட்டி முடிக்கப்பட்டது.

இது குறித்த கோரிக்கைகளை கவிஞர் சல்மா அவர்கள் ஏற்கனவே ஒன்றிய அமைச்சரிடம் நேரில் வழங்கியுள்ளார்.

3. **அரசியல் மற்றும் பண்பாடு:**

அரசியல் நாகரீகம் கருதி எதிர்க்கட்சியினரை இழிவுபடுத்தாமல், முதல்வர் கற்றுக்கொடுத்த பண்போடும் கண்ணியத்தோடும் பேசுவதாக குறிப்பிட்டார்.

”திமுக குடும்பம் என்பது கலைஞர் குடும்பம் மட்டுமல்ல, அது நீதிக்கட்சி காலத்திலிருந்தே சுயமரியாதையுடனும் தன்மானத்துடனும் செயல்படும் ஒட்டுமொத்த திராவிட முன்னேற்றக் கழக குடும்பம் என்றார்

4. **ஒன்றிய அரசுக்கான கோரிக்கை:**

பாஜகவைச் சார்ந்த ஒன்றிய அமைச்சரிடம் தமிழகத்திற்கு வரவேண்டிய கல்வி உதவித் தொகையான 3,548 கோடியை பெற்றுத் தருமாறு எதிர்க்கட்சியினருக்கு சவால் விடுத்தார்.

### எதிர்க்கட்சிகள் மீதான விமர்சனம்

மத்திய அரசிடம் இருந்து தமிழகத்திற்கு வரவேண்டிய 3,112 கோடி நிதியைப் பெற்றுத் தர எந்த முயற்சியும் எடுக்காமல், மேடை போட்டுப் பேசுவது முறையல்ல .

தைரியமாகப் பேசுபவரை ”துணிந்த குமார் என்றும், பயந்து போய் பணிந்து பேசுபவரை ”பணிந்த குமார் என்றார்

எதிர்க்கட்சியினர் தேவையற்ற ஆவேசத்துடன் சண்டைக்கு வருவதாகவும், தங்களுக்குச் செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருப்பதாகவும் கூறுகிறார்.

### திராவிட மாடல் 2.0

திமுக ஆட்சியில் தமிழகம் முதலிடத்தில் இருப்பதாகவும், அடுத்த 60 நாட்களில் ”திராவிட மாடல் 2.0 மற்றும் ”மணப்பாறை 2.0 போன்ற வளர்ச்சித் திட்டங்களை நோக்கிச் செயல்பட உள்ளதாகவும் தெரிவித்தார்.

### சட்டமன்றத்தில் “ஒரே அணியில் தமிழ்நாடு”

தமிழக முதல்வர் கொண்டு வந்த ”ஒரே அணியில் தமிழ்நாடு என்ற நிலையைத் தோழமைக் கட்சிகள் அனைத்தும் பாராட்டியுள்ளன.

கடந்த ஐந்து ஆண்டுகளில் பெண்கள், மாணவர்கள், விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோர் என அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பதாகச் சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்டது.

### ஜனநாயகப் பண்பு

சட்டமன்றத்தின் இறுதி நாளில் அதிமுக உறுப்பினர் அண்ணன் ஐயப்பன் பேச வாய்ப்பு கேட்டபோது, சலசலப்பு ஏற்படும் என்று கருதாமல், ”இது ஜனநாயகம் நிறைந்த சட்டமன்றம், அவரைப் பேச விடுங்கள் என்று முதல்வர் அனுமதி அளித்ததை அமைச்சர் பெருமையுடன் குறிப்பிட்டார்.

சட்டமன்ற உறுப்பினர் ஐயப்பன், இந்த ஆட்சியில் அனைத்து தரப்பு மக்களும், குறிப்பாக அவரது தொகுதியைச் சேர்ந்த பெண்களும் அதிகளவில் பயனடைந்துள்ளதாக நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

சட்டமன்ற உறுப்பினர் ஐயப்பனின் பேச்சைக் கேட்டு நெகிழ்ந்த முதலமைச்சர், பின்வரும் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்:

**அனைவருக்குமான அரசு:** இது ஒரு குறிப்பிட்ட கட்சிக்கான அரசு அல்ல, இது ”நமது அரசு. வாக்களித்தவர், வாக்களிக்காதவர் என பாகுபாடின்றி அனைவரையும் காக்கும் பொறுப்பு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு.

ஒற்றுமை: ”ஓரணியில் தமிழ்நாடு என நாம் சொல்வது போல, இன்று மாற்றுக்கட்சியினரும் பாராட்டும் வகையில் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படுகின்றனர்.

### இது எனது அரசல்ல நமது அரசு!

அதிமுக சட்டமன்ற உறுப்பினர் ஐயப்பன், திமுக ஆட்சியில் மக்கள் (குறிப்பாக அவர் தொகுதியைச் சேர்ந்த பெண்கள்) அதிக அளவில் பயன்பெற்றுள்ளதாகப் பாராட்டியுள்ளார்.

அவர் தனது உரையின் முடிவில், அதிமுக உறுப்பினராக இருந்தாலும், எம்.ஜி.ஆர் மற்றும் ஜெயலலிதாவின் ஆசியோடு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களே மீண்டும் முதலமைச்சராக வருவார் என்று நம்பிக்கையுடன் கூறியுள்ளார்.

மாற்றுக்கட்சியினரே பாராட்டும் வகையில் இந்த அரசாங்கம் செயல்பட்டு வருகிறது.

”இது எனது அரசு அல்ல, நமது அரசு என்று சட்டமன்றத்தில் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார்.

தமக்கு வாக்களித்தவர்கள் மற்றும் வாக்களிக்காதவர்கள் என அனைவரையும் காக்க வேண்டிய பொறுப்பு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருப்பதாக அவர் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

3. **எதிர்காலத் திட்டம் மற்றும் தேர்தல் எதிர்பார்ப்பு**

இன்னும் 60 நாட்களில் தேர்தல் வரவுள்ள நிலையில், மே மாதம் 7ஆம் தேதி மீண்டும் இதே கூட்டணி ஆட்சி அமைக்கும் என்ற நம்பிக்கை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆளுநர் மாளிகையில் மீண்டும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராகப் பதவியேற்கும் நிகழ்வு உறுதியாக நடக்கும்.

இவ்வாறு அமைச்சர் அவர்கள் உரையாற்றினார்.



கழக தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தஞ்சை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை அன்பழகன் எம்.எல்.ஏ ஆலோசனையின் பேரில் தஞ்சை வடக்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பாக அமைப்பாளர் பாவை ஹனிபா ஏற்பாட்டில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி 300 பேருக்கு பிரியாணி வழங்கும் நிகழ்ச்சி பாபநாசத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் என்.நாசர், பேரூர் கழக செயலாளர் ச.கபிலன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் கே.செல்வமுத்து குமரன், மாவட்ட பிரதிநிகள் அறிவழகன், இராம பிரபு, தமிழ், பா. கார்த்தி, அரசு வழக்கறிஞர் வெற்றிச்செல்வன் மற்றும் கலியமூர்த்தி, உதயா, பிரபு, கோபிநாத் மற்றும் கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.


